 

# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

எண்.41 - வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

எண்.51 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

## அறிவிப்புகள்

## 2022 - 2023

# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

## மானியக் கோரிக்கை

எண்.41 - வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

எண்.51 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

## அறிவிப்புகள்
## 2022 - 2023

**கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**
வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மைத்துறை அமைச்சர்

## 1. புதிய திருவோணம் வருவாய் வட்டம் உருவாக்கப்படும்.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய வட்டங்களைச் சீரமைத்து புதிதாக திருவோணம் வருவாய் வட்டம் ரூ.7.56 கோடி செலவில் உருவாக்கப்படும்.

## 2. புதிய வாணாபுரம் வருவாய் வட்டம் உருவாக்கப்படும்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டத்தினைச் சீரமைத்து புதிய வாணாபுரம் வருவாய் வட்டம் ரூ.7.56 கோடி செலவில் உருவாக்கப்படும்.



## 3. சிறப்பு வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) பணியிடங்கள் நான்கு வட்டங்களில் புதிதாக தோற்றுவிக்கப்படும்.

சமுதாயத்தில் மிகவும் நலிவுற்ற மக்களைச் சேர்ந்த வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய திருமணமாகாத பெண்கள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் ஆகியோருக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென வட்ட அலுவலகங்களில் தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) தனி அலகு ஏற்படுத்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி சென்னை மாவட்டத்தில், மாதவரம் வட்டம், கடலூர் மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடி வட்டம், கரூர் மாவட்டத்தில் கடவூர் வட்டம் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலை வட்டம் ஆகிய வட்டங்களில் சிறப்பு வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) பணியிடங்கள் ஆண்டொன்றுக்கு ரூ.1.11 கோடி செலவில் தோற்றுவிக்கப்படும்.

## 4. மாவட்டங்களில் 274 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்கள் நிரப்பப்படும்.

வருவாய் நிருவாகத்தின் அடிப்படை கிராம நிருவாகம் ஆகும். கிராம நிருவாக அலுவலர்கள், கிராம கணக்குகளை பராமரித்தல், கிராமத்திலுள்ள அரசு நிலங்கள் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், வரிவசூல் செய்தல், பிறப்பு, இறப்புகளை பதிவு செய்தல், சான்றிதழ்கள் பெற பரிந்துரை செய்தல், அரசின் நலத்திட்டங்களை செயல்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை செய்து வருகின்றனர். இச்சேவைகள் மக்களை விரைந்து சென்றடைய மாவட்டங்களில் 274 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்கள் நிரப்பப்படும்.



## 5. பழுதடைந்த நிலையில் உள்ள 10 வட்டாட்சியர் அலுவலக கட்டடங்களுக்கு பதிலாக புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

தமிழகத்தில் வருவாய்த் துறையில் பழுதடைந்த நிலையில் இருக்கும் கட்டடங்களுக்கு மாற்றாக புதிய கட்டடங்களை கட்டி தரவேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு 10 வருவாய் வட்டங்களில் புதிதாக வட்டாட்சியர் அலுவலக கட்டடங்கள் ரூ.50.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

6. பழுதடைந்த நிலையில் உள்ள 50 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடங்களுக்கு பதிலாக புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

தமிழகத்தில் வருவாய்த் துறையில் பழுதடைந்த நிலையில் இயங்கி கொண்டிருக்கும் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடங்களுக்கு மாற்றாக புதிய கட்டடங்கள் கட்டி தரவேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு, புதிதாக 50 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடம் ரூ.13.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.



7. நாகப்பட்டினம் நகராட்சி, நம்பியார் நகரில் பேரிடர் மீட்பு மையம் அமைக்கப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நகராட்சி, நம்பியார் நகர் பகுதி புயல், மழை, வெள்ளத்தால் அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதியாகும். ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவமழைக் காலத்தில் ஏற்படும் கன மழை மற்றும் புயல், வெள்ளத்தின் காரணமாக பாதிப்புள்ளாகும் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். நம்பியார் நகர் பகுதியில் ஏற்கனவே செயல்பட்டு வந்த புயல் பாதுகாப்பு கட்டடம் முற்றிலும் சேதமடைந்த காரணத்தால் முழுவதுமாக இடிக்கப்பட்டுவிட்டது.

எனவே, பேரிடர் காலங்களில், பாதிப்பிற்குள்ளாகும் நம்பியார் நகர் பகுதி பொதுமக்களை முன்கூட்டியே மீட்டு, பேரிடர் மீட்பு மையத்தில் தங்க வைப்பதன் மூலம் பேரிடர் காரணமாக ஏற்படும் மனித உயிரிழப்புகளை பெரிய அளவில் தவிர்க்க இயலும் என்பதால் நம்பியார் நகர் பகுதியில் ரூ. 6.00 கோடி மதிப்பீட்டில் பேரிடர் மீட்பு மையம் அமைக்கப்படும்.

## 8. மாவட்ட அவசர செயல்பாட்டு மையம் நவீனமயமாக்கப்படும்.

பேரிடர்களின் போது அவசர கால எச்சரிக்கை செய்திகளை உடனுக்குடன் பொதுமக்களுக்கு தெரிவிக்கும் தகவல் மையங்களாக செயல்படும் மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையங்களுக்கு நவீன உபகரணங்கள் வழங்குவது அவசியமாகிறது.

எனவே, மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையங்களின் செயல்பாட்டை விரைவுபடுத்த 38 மாவட்டங்களில் உள்ள அவசரக் கட்டுப்பாட்டு மையங்கள் ரூ.1.50 கோடி செலவில் நவீனமயமாக்கப்படும்.



## 9. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்கு உபகரணங்கள் வாங்குதல் மற்றும் பணியாளர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்தல்.

பேரிடர் காலங்களில் தேடல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் முக்கியப் பங்கு வகிக்கும் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது கடந்த 2021-ஆம் ஆண்டில் ரூ.241 கோடி மதிப்பிலான சொத்துக்களை சேதமடைவதிலிருந்து காப்பாற்றியுள்ளது. மேலும், 11,016 நபர்கள் பேரிடர்களிலிருந்து பாதுகாப்பாக மீட்கப் பட்டுள்ளனர்.

குறைந்த கால அளவில் விரைந்து மீட்பு பணியில் ஈடுபடும் வண்ணம் தீயணைப்புத் துறையின் திறனை வலுப்படுத்த தேடல் மற்றும் மீட்பு பணிகளுக்கு தேவைப்படும் தண்ணீர் இறைப்பான்கள், அவசரகால மீட்பு வாகனம், சுவாசக் கருவிகள் உள்ளிட்ட உபகரணங்களை கொள்முதல் செய்யவும் மற்றும் தீயணைப்பு வீரர்களுக்கு பயிற்சி அளித்திடவும் ரூ.10.51 கோடி வழங்கப்படும்.

**10. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் திறன்களை மேம்படுத்த மீட்பு வாகனங்கள் வாங்கப்படும்.**

பேரிடர் காலங்களில் பேரிடர் மீட்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் திறனை மேம்படுத்த, தேடல், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடும் மீட்புக் குழுவினரையும் உபகரணங்களையும் கொண்டு செல்வதற்கு ரூ.2.47 கோடி செலவில் மீட்பு வாகனங்கள் கொள்முதல் செய்யப்படும்.



**11. பேரிடர் தொடர்பான பயிற்சி தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரியில் செயல்பட்டு வரும் பேரிடர் மேலாண்மை மையம், பேரிடர் மேலாண்மைக்கான சிறப்பு தகுதி மையமாக தரம் உயர்த்தப்படும்.**

பேரிடர்களின் அபாயத்தைக் குறைப்பதற்கும், பேரிடர்களை திறம்பட கையாள்வதற்கும், தொடர்புடைய பங்கேற்பாளர்களின் ஆற்றல் மற்றும் தேவைகளை முறையாக கணக்கிடுதல், முக்கிய துறைகளின் திறன்களை மேம்படுத்துதல், மாவட்ட அளவிலான அலுவலர்கள், உள்ளாட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல் தற்போதுள்ள சுகாதாரம் மற்றும் கல்வி தொடர்பான பயிற்சித் திட்டங்களில் பேரிடர் தொடர்பான பேரிடர் அபாயக் குறைப்பு குறித்து அறிமுகப்படுத்துதல் மற்றும் பேரிடர் அபாய குறைப்பு பணிகளில் ஈடுபடும் முக்கிய பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி அளித்தல் அவசியமாகிறது.

பேரிடர் தொடர்பாக பயிற்சி மட்டும் அல்லாது, ஆராய்ச்சி, பிற மாநிலங்களுக்கு பேரிடர் மேலாண்மை தொடர்பான ஆலோசனை வழங்குதல், கல்வி நிறுவனங்களுடன் இணைந்து பேரிடர் மேலாண்மையில் பட்டம் மற்றும் பட்டயப் படிப்புகளை உருவாக்குதல் போன்ற செயல்பாடுகளையும் மேற்கொள்ளும் வகையில் அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரியில் செயல்பட்டு வரும் பேரிடர் மேலாண்மை மையம், பேரிடர் மேலாண்மைக்கான சிறப்பு தகுதி மையமாக தரம் உயர்த்தப்படும்.



12. நிலச் சீர்திருத்த ஆணையரகத்தில் மின்னனு அலுவலக நடைமுறை மற்றும் இணையவழி சேவைகளை மேம்படுத்த கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்.

பொதுமக்களுக்கு விரைந்து சேவைகள் அளித்திட நிலச் சீர்திருத்த ஆணையரகத்தில் மின்னனு அலுவலகப் பணி (e-office) மற்றும் இணையவழி சேவைகளை நடைமுறைபடுத்திட கணினிகள் மற்றும் இதர உபகரணங்கள் கொள்முதல் செய்திட ரூ.25 இலட்சம் வழங்கப்படும்.

## 13. நகர்ப்புற புலவரைப்படம் (TSLR Sketch) இணையவழியில் பதிவிறக்கம் செய்ய வழிவகை செய்யப்படும்.

நகர்ப்புறங்களுக்கான பிளாக் வரைபடங்கள் கணினிப்படுத்தப்பட்டு இணைய வழி சேவைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இதன்படி, ஒவ்வொரு நகர்ப்புலத்திற்கான வரைபடமும் உருவாக்கப்பட்டு அவற்றைப் பொதுமக்கள் பார்வையிட்டுப் பதிவிறக்கம் செய்து கொள்ள ஏதுவாக இணைய வழி சேவைக்குக் கொண்டு வரப்படும்



## 14. புவியியல் தகவல் அமைப்பு பிரிவு உருவாக்கப்படும்.

நில அளவைத் துறையில் அளவைப் பணிகள் மேற்கொள்ள நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதால், கணினிப்படுத்தப்பட்ட வரைபடங்களை பரிசீலித்து, மேம்படுத்தும் பொருட்டு சென்னை, நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்ககத்தில் புவியியல் தகவல் அமைப்பு பிரிவு ரூ.14.22 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்

## 15. புவியியல் தகவல் அமைப்பில் உள்ள முதுநிலை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

நில அளவைப் பணி மற்றும் வரைபடங்கள் தயாரிக்கும் பணிகளில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு, தேசிய புவி தகவல் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், ஹைதராபாத் மற்றும் சென்னை, அண்ணா பல்கலைக் கழகம் இணைந்து நில அளவை துறையின் முதுநிலை அலுவலர்களுக்கு புவியியல் தகவலமைப்பு குறித்த பயிற்சி அளிக்க ரூ.10 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்படும்.



## 16. நில அளவை இயக்குநகரம் மற்றும் 5 மாவட்ட நில அளவை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

சென்னை நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநகரம் மற்றும் விருதுநகர், கோயம்புத்தூர், நாமக்கல், திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள மாவட்ட நில அளவை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட ரூ.73.29 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**17. நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், நாரைக்கிணறு கிராமத்தில் அசல் நிலவரித்திட்டம் மேற்கொள்ளப்படும்.**

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், நாரைக்கிணறு மலைக்கிராமத்தில் 2474 ஏக்கர் நிலத்தில் அசல் நிலவரித்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 1500 குடும்பங்கள் பயனடையும் வகையில் பட்டா வழங்கப்படும்.



**18. கடலூர் மாவட்டம், நெய்வேலி நகரியப்பகுதியை சுற்றியுள்ள விஜயமாநகரம் மற்றும் புதுக்கூரைப்பேட்டை கிராமங்களில் அசல் நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

கடலூர் மாவட்டம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்காக நிலஎடுப்பு பணி மேற்கொள்ளப்பட்ட போது பாதிக்கப்பட்ட 15 கிராம மக்கள் நெய்வேலி நகரியப்பகுதியை சுற்றியுள்ள விஜயமாநகரம் மற்றும் புதுக்கூரைப் பேட்டை கிராமங்களில் குடியமர்த்தப்பட்டனர். இம்மறு குடியமர்த்தப்பட்ட கிராம நிலங்களில் நிலவரித்திட்டப் பணிகள் நடைமுறைப் படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 3000 குடும்பங்கள் பயனடையும் வகையில் பட்டா வழங்கப்படும்.

19. நகர்ப்புறங்களில் வருவாய் பின்தொடர் பணிகளை விரைவுபடுத்த புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

நகர்ப்புற நில ஆவணங்களின் தரவுத்தளங்கள் புதுப்பிக்கப்பட்டு, நகர்ப்புறங்களில் குடிமக்களுக்கு இணையவழி பட்டா வழங்கிடும் வகையில், நகரம் / நகராட்சி / மாநகராட்சி பகுதிகளில் வருவாய் பின் தொடர் பணிகளை விரைவுப்படுத்த புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.



20. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம் புன்னக்காயல் கிராமத்தில் அரசு நிலத்தில் வசிப்பவர்களுக்கு வகைபாடு மாற்றம் செய்து பட்டா வழங்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம் புன்னக்காயல் கிராமத்தில் சுமார் 28.83.00 ஹெக்டேர் அரசு நிலத்தில் நீண்டகாலமாக வசித்து வரும் ஏழை மக்களுக்கு கிராம நத்தமாக வகைபாடு மாற்றம் செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும். இதன் மூலம் சுமார் 800 குடும்பங்கள் பயன் பெறுவர்.

21. விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், நரசிங்கராயன் பேட்டை கிராமத்தில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் வசிப்பவர்களுக்கு வகைபாடு மாற்றம் செய்து பட்டா வழங்கப்படும்.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், நரசிங்கராயன் பேட்டை கிராமத்தில் சுமார் 25 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தில் நீண்டகாலமாக வசித்து வரும் ஏழை மக்களுக்கு வகைபாடு மாற்றம் செய்து பட்டா வழங்கப்படும். இதன் மூலம் சுமார் 350 குடும்பங்கள் பயன் பெறுவர்.

**கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**
வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மைத்துறை அமைச்சர்